# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 52/2024

| | |
|---|---|
| | Prosecution PW 1 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | சக்தி |
| Father's Name | : | குருசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 21.04.2025

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் புலியூரில் குடியிருந்து டெக்ஸ்டைல் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். குருசாமி என் கணவர் ஆவார். கடந்த 2.7.2022 ம் தேதி என் கணவர் டெம்போ வாகனம் ஓட்டி வருகிறார். வாகனத்தை ஆயுதப்படை அருகே நிறுத்திவிட்டு இருசக்கர வாகனத்தில் வாத்தியார் காலனி அருகே வீட்டிற்கு வந்து கொண்டிருந்தபோது டிப்பர் வாகனம் மோதி அடிபட்டு விட்டதாக இரவு 9.15 மணியளவில் அடிபட்டதாகவும் அடிபட்ட என் கணவரை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனை அனுப்பியதாகவும் ரமேஷ் என்பவர்

**(Sd)S.P.** பரத்குமார்
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

என் வீட்டிற்கு வந்து சொன்ன தகவல் கேள்விப்பட்டு, நானும் என் மகனும் கரூர் அரசு மருத்துவமனை சென்று பார்த்தேன். அங்கு மருத்துவர் என் கணவர் இறந்துவிட்டதாக கூறினார். விபத்து சம்பந்தமாக பசுபதிபாளையம் காவல்நிலையம் வந்து புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார்மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது. **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பிரேத விசாரணையின்போது நான் உடனிருந்தேன் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

நான் 5 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழ் எனக்கு அவ்வளவாக எழுதப்படிக்கத் தெரியாது. புகாரை யார் எங்கு வைத்து எழுதினார்கள் என்றால் போலீஸ் ஸ்டேசனில் எழுதினார்கள். யார் எழுதினார்கள் என்று தெரியாது. புகார் எந்த தேதியில் எத்தனை மணிக்கு எழுதப்பட்டது என்றால் 3.7.2022 ம் தேதி சுமார் காலை 11.00 மணிக்கு மேல் எழுதப்பட்டது. ப.சா 1 முதல் 9 வரையான சாட்சிகள் எனக்கு உறவினர்கள் மற்றும் நண்பர்கள் ஆவார்கள். இவர்களுடைய பெயர், முகவரியை நான்தான் போலீசாரிடம் கொடுத்தேன் என்றால் இவர்கள் எல்லாம் என்னுடையன் காவல்நிலையம் வந்திருந்தார்கள் அப்போது பெயர்களை கொடுத்திருந்தார்கள். போலீசார் புகார் கொடுக்க சென்றபோது என்னை விசாரணை எதுவும் செய்தார்களா என்றால் அந்த நேரத்தில் என்ன நடந்தது என்று தெரியாமல் எதுவும் சொல்லவில்லை. நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், ப.சா.2 என் உறவினர் என்பதால் பார்க்காத சம்பவத்தை அவர் பார்த்ததாக தவறான தகவலுடன் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரணை செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**(Sd)S.P.** பரத்குமார்
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**